# THOZHAN ACADEMY

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

## FEBRAUARY 23/2026
## DAILY CURRENT AFFAIRS
## ( தமிழ் /ENGLISH)

Prepared By :
SATHISH KUMAR T

Prepared For :
TNPSC,UPSC,SSC,TNUSRB

TNPSC GROUP 1 TEST
BATCH STRATS ON FEB 22




9894856153
JOIN OUR TELEGRAM CHANNEL
https://t.me/thozhanias

# 1. TAMIL NADU STATE NEWS

## A. Government Welfare Schemes

The Tamil Nadu government highlighted several flagship schemes:



- **Thaayumanavar Thittam:** Ensures doorstep delivery of ration items to 27.41 lakh differently-abled individuals and old age homes. Additionally, the monthly maintenance allowance for differently-abled persons has been increased to Rs. 2,000, benefiting 2.59 lakh people.
- **Anbukkarangal Thittam:** Provides a monthly financial assistance of Rs. 2,000 to 10,637 children who have lost their parents, enabling them to continue their education.
- **Kalaignar Kaivinai Thittam:** Aimed at empowering traditional artisans, this scheme provides Rs. 405 crore as loan assistance and an Rs. 83 crore subsidy to 23,879 artisans across the State.
- **Tholkudi Thittam:** A dedicated tribal welfare scheme focused on building 6,685 houses and executing 908 infrastructure projects at an estimated cost of Rs. 450 crore.
- **Ootachathai Uruthi Sei Thittam:** A nutritional intervention scheme that provides special nutritional food to 1.83 lakh mothers and children. The scheme has successfully led to a 78% increase in the weight of malnourished children.
- **Transgender Welfare Initiatives:** The monthly pension for transgender persons has been increased to Rs. 1,500. The government has also established "Aran Illam" to ensure their safety and offers higher education scholarships alongside appointments in the Home Guards.

# 2. NATIONAL NEWS

### A. Economy: Revision of Consumer Price Index (CPI) Base Year




- India's inflation index has been formally updated to the base year **2024=100**.
- **Methodological Change:** The new CPI utilizes data from the updated Household Consumption Expenditure Survey (HCES), reorganizing the basket into 12 distinct categories (as per COICOP 2018 standards).
- **Impact:** The weightage of food has declined, while the weight of housing and services has increased, providing a clearer picture of structural inflation. Consequently, states heavily reliant on services—like Telangana, Kerala, Tamil Nadu, and Karnataka—are now recording the highest inflation rates nationally under the new index.

### B. Internal Security

- **Kishtwar Encounter (Operation Trashi-1):** The Indian Army eliminated three Jaish-e-Mohammed (JeM) terrorists, including their commander Saifullah, in J&K's Kishtwar district.

### C. Infrastructure & Awards

- **Namo Bharat RRTS Completed:** The Prime Minister inaugurated the final stretches of the Delhi-Meerut Regional Rapid Transit System (RRTS), completing the 82-km high-speed commuter corridor and integrating it with the Meerut Metro.
- **BAFTA 2026:** The Manipuri film *'Boong'*, directed by Lakshmipriya Devi, created history by winning India's first BAFTA award in the Best Children and Family Film category.

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

## 3. INTERNATIONAL NEWS & GEOPOLITICS

- **US Supreme Court Strikes Down Tariffs:** In a major relief to global trade and India, the US Supreme Court struck down US President Donald Trump's sweeping global tariffs (which included 50% duties on Indian exports). The court ruled that the President's use of the International Emergency Economic Powers Act (IEEPA) to impose unilateral, unlimited tariffs lacked congressional authorization.




- **Brazil President's Visit to India:** Brazilian President Luiz Inacio Lula da Silva visited India and advocated for Global South countries to form "negotiating blocs" against US tariffs. He also reiterated the demand for expanding the UN Security Council to include India, Brazil, and African nations as permanent members.

## 4. IMPORTANT EDITORIALS (For TNPSC Mains Answer Writing)

### 1. Parliament's Historic Law, an Extended Wait for Women

**TNPSC Syllabus Link:** Indian Polity - Social Justice, Women Empowerment, Constitutional Amendments.

- **Context:** This editorial, penned by former Chief Election Commissioner S.Y. Quraishi, critically analyzes the implementation timeline of the Women's Reservation Act (Nari Shakti Vandan Adhiniyam) passed in September 2023.
- **The Core Issue (The Delay):** While the Act promises a 33% reservation for women in the Lok Sabha and State Assemblies, a specific clause mandates that it will only come into effect *after* the first Census taken post-2026 and the subsequent delimitation exercise. Since the next Census will likely begin only in 2027, the delimitation process might stretch to 2032 or 2033. Consequently, women will not get reservation in the upcoming 2029 Lok Sabha elections and may have to wait until 2034.
- **Critical Flaws Highlighted for Mains:**

1. **Delimitation Linkage:** Tying women's rights to the highly contentious North-South population-based seat allocation (delimitation) creates an unnecessary constitutional bottleneck.

2. **Exclusions:** The Act fails to provide reservation in the Rajya Sabha and State Legislative Councils.
3. **OBC Representation:** While there is a sub-quota for SC/ST women, there is no sub-reservation for OBC women, who constitute roughly 40% of the population.

- **Way Forward:** The author suggests that the government should leverage Article 15(3) of the Constitution (which allows special provisions for women and children) to amend the Act and implement the reservation immediately, delinking it from the delimitation process.

### 2. Lines in the Sand (India in the 'Pax Silica' Alliance)




**TNPSC Syllabus Link:** Science & Tech International Relations

- **Context:** India has officially joined the US-led '**Pax Silica**' alliance. This coalition is designed to build secure, democratic infrastructure for Artificial Intelligence (AI) and fortify critical mineral supply chains globally.
- **Significance for India:** * This strategic move aligns perfectly with domestic initiatives like the *India Semiconductor Mission*, *IndiaAI*, and the *National Critical Mineral Mission*.
  - By integrating its vast engineering talent and growing assembly capabilities, India aims to position itself as a reliable alternative to China, helping the global market diversify tech supply chains.

- **Challenges & Geopolitical Risks:** * **Economic Retaliation:** Joining an overtly anti-China tech coalition invites potential trade friction or economic retaliation from Beijing.
  - **Policy Clash:** The rigid framework of the alliance, including strict US export controls and tech-transfer regulations, contradicts India's traditional foreign policy of "issue-based alignment" (strategic autonomy/non-alignment), forcing India to choose sides in a tech Cold War.

### 3. Tariffs in Trouble (US Supreme Court vs. Presidential Powers)

**TNPSC Syllabus Link:** International Economy, Current Affairs.

- **Context:** In a landmark 6-3 decision, the US Supreme Court struck down the sweeping global tariffs imposed by President Donald Trump.
- **The Ruling:** Trump had utilized the International Emergency Economic Powers Act (IEEPA) to impose unilateral, unlimited tariffs on various countries. The Supreme Court ruled this unconstitutional, stating that the President lacks the power of "taxation" without explicit authorization from Congress.
- **Impact on India:** This is a massive diplomatic and economic relief for India. The US administration had recently imposed a severe 50% tariff on Indian exports as retaliation for India's continued purchase of Russian oil. With these tariffs nullified, the strain on Indian exporters is lifted, providing a much stronger foundation for Indian trade negotiators to pursue future Free Trade Agreements (FTAs).

## MCQs

**1. Which of the following schemes of the Tamil Nadu Government is aimed at providing direct doorstep ration delivery to differently-abled persons and old age homes?**

A) Anbukkarangal Thittam

B) Thaayumanavar Thittam

C) Tholkudi Thittam

D) Kalaignar Kaivinai Thittam

**2. As per the recent updates to the Consumer Price Index (CPI) in India, what is the newly revised base year?**

A) 2011-12

B) 2018

C) 2022

D) 2024

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

**3. Which Manipuri film recently made history by winning India's first BAFTA award in the Best Children and Family Film category?**

A) Arco

B) Boong

C) Zootropolis

D) Lilo

**4. India recently joined the US-led 'Pax Silica' alliance. What is the primary focus of this global coalition?**

A) Maritime security in the Indo-Pacific

B) Artificial Intelligence infrastructure and critical minerals

C) Global healthcare and pandemic preparedness

D) Space exploration and satellite sharing

**5. The United States Supreme Court recently struck down the sweeping global tariffs imposed by President Donald Trump. Which act did the President use to impose these unconstitutional tariffs?**

A) Trade Expansion Act

B) International Emergency Economic Powers Act (IEEPA)

C) National Emergencies Act

D) Foreign Trade and Investment Act

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

**6. According to the Tamil Nadu Government's 'Kalaignar Kaivinai Thittam', what is the main objective of the scheme?**

A) To provide free housing for Sri Lankan Tamils

B) To provide financial assistance to children who lost their parents

C) To provide loan assistance and subsidies to traditional artisans

D) To provide special nutritional food for mothers and children

# Answers

1. **B) Thaayumanavar Thittam**
2. **D) 2024**
3. **B) Boong**
4. **B) Artificial Intelligence infrastructure and critical minerals**
5. **B) International Emergency Economic Powers Act (IEEPA)**
6. **C) To provide loan assistance and subsidies to traditional artisans**

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

# 1. தமிழ்நாடு மாநில செய்திகள்

## A. அரசு நலத்திட்டங்கள்

- **தாயுமானவர் திட்டம்:** 27.41 லட்சம் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நேரடியாக ரேஷன் பொருட்கள் வழங்கும் திட்டம். மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்புத் தொகை ரூ.2,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது (இதன் மூலம் 2.59 லட்சம் பேர் பயன்பெறுகின்றனர்).



- **அன்புக்கரங்கள் திட்டம்:** பெற்றோரை இழந்த 10,637 குழந்தைகள் கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 நிதியுதவி வழங்கப்படுகிறது.
- **கலைஞர் கைவினைத் திட்டம்:** பாரம்பரிய கைவினைக் கலைஞர்களை மேம்படுத்தும் நோக்கில், மாநிலம் முழுவதும் உள்ள 23,879 கலைஞர்களுக்கு ரூ.405 கோடி கடனுதவி மற்றும் ரூ.83 கோடி மானியம் வழங்கப்படுகிறது.
- **தொல்குடி திட்டம்:** பழங்குடியினர் நலனுக்காக ரூ.450 கோடி மதிப்பீட்டில் 6,685 வீடுகள் மற்றும் 908 உட்கட்டமைப்பு வசதிகளை அமைக்கும் சிறப்புத் திட்டம்.
- **ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம்:** 1.83 லட்சம் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து உணவு வழங்கும் திட்டம். இதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் எடை 78% அதிகரித்துள்ளது.
- **திருநங்கைகள் நலன்:** திருநங்கைகளுக்கான மாதாந்திர ஓய்வூதியம் ரூ.1,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களின் பாதுகாப்பிற்காக "அரண் இல்லம்" உருவாக்கப்பட்டுள்ளதுடன், உயர்கல்வி உதவித்தொகை மற்றும் ஊர்க்காவல் படையில் பணிவாய்ப்பும் வழங்கப்படுகிறது.

Thozhan Academy
Discover Yourself, Define Your Future

# 2. தேசிய செய்திகள்

## A. பொருளாதாரம்: நுகர்வோர் விலை குறியீட்டு (CPI) அடிப்படை ஆண்டு மாற்றம்:




- இந்தியாவின் பணவீக்க குறியீட்டுக்கான அடிப்படை ஆண்டு (Base Year) இப்போது **2024=100** ஆக புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- **மாற்றம்:** புதிய CPI, புதுப்பிக்கப்பட்ட 'வீட்டு நுகர்வு செலவின கணக்கெடுப்பு' (HCES) தரவைப் பயன்படுத்தி, நுகர்வுப் பொருட்களை 12 வகைகளாகப் (COICOP 2018 தரநிலைப்படி) பிரித்துள்ளது.
- **தாக்கம்:** இதில் உணவுப் பொருட்களின் வெயிட்டேஜ் குறைந்துள்ளது; அதேசமயம் வீட்டு வசதி மற்றும் சேவைகளின் வெயிட்டேஜ் அதிகரித்துள்ளது. இதனால் சேவைகளை அதிகம் நம்பியுள்ள தெலுங்கானா, கேரளா, தமிழ்நாடு மற்றும் கர்நாடகா மாநிலங்களில் தேசிய அளவில் அதிக பணவீக்கம் பதிவாகியுள்ளது.

Thozhan Academy
Discover Yourself, Define Your Future

## B. உள்நாட்டுப் பாதுகாப்பு:

- **கிஷ்ட்வார் என்கவுண்டர் (ஆபரேஷன் த்ராஷி-1):** ஜம்மு காஷ்மீரின் கிஷ்ட்வார் மாவட்டத்தில் இந்திய ராணுவம் 3 ஜெய்ஷ்-இ-முகமது (JeM) பயங்கரவாதிகளை (கமாண்டர் சைபுல்லா உட்பட) சுட்டுக் கொன்றது.

## C. உட்கட்டமைப்பு மற்றும் விருதுகள்:

- **நமோ பாரத் ஆர்.ஆர்.டி.எஸ் (Namo Bharat RRTS):** டெல்லி-மீரட் பிராந்திய விரைவுப் போக்குவரத்து அமைப்பின் (RRTS) இறுதிப் பகுதியை பிரதமர் தொடங்கி வைத்தார். இதன் மூலம் 82 கி.மீ அதிவேகப் பாதை நிறைவடைந்தது.
- **பாஃப்டா 2026 (BAFTA):** லக்ஷ்மிபிரியா தேவி இயக்கிய மணிப்பூரி திரைப்படமான 'பூங்' (Boong), சிறந்த குழந்தைகள் மற்றும் குடும்பத் திரைப்படப் பிரிவில் இந்தியாவின் முதல் பாஃப்டா விருதை வென்று வரலாறு படைத்துள்ளது.

## 3. சர்வதேச செய்திகள் மற்றும் புவிசார் அரசியல்

- **அமெரிக்க அதிபரின் வரிகளை ரத்து செய்த உச்ச நீதிமன்றம்:** அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், சர்வதேச அவசரகாலப் பொருளாதார அதிகாரச் சட்டத்தைப் (IEEPA) பயன்படுத்தி உலக நாடுகள் (இந்திய ஏற்றுமதிகள் மீதான 50% வரிகள் உட்பட) மீது தன்னிச்சையாக விதித்த வரிகளை அமெரிக்க உச்ச நீதிமன்றம் ரத்து செய்துள்ளது. இது இந்தியாவிற்கு மிகப்பெரிய வர்த்தக ரீதியான விடுதலையாகும்.




- **பிரேசில் அதிபரின் இந்தியப் பயணம்:** பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா இந்தியாவிற்கு வருகை புரிந்தார். அமெரிக்காவின் வரிகளுக்கு எதிராக 'குளோபல் சவுத்' (Global South) நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என அவர் வலியுறுத்தினார். மேலும், ஐநா பாதுகாப்பு சபையில் இந்தியா, பிரேசில் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளை நிரந்தர உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையையும் மீண்டும் வலியுறுத்தினார்.

## 4. முக்கிய தலையங்கங்கள் (Editorials - TNPSC முதன்மைத் தேர்வுக்காக)

### 1. மகளிர் இடஒதுக்கீடு சட்டம்: ஒரு நீண்ட காத்திருப்பு

**TNPSC பாடத்திட்டம்:** இந்திய அரசியலமைப்பு - சமூக நீதி, அதிகாரமளித்தல், அரசியலமைப்பு திருத்தங்கள்.

- **பின்னணி:** முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய். குரேஷி எழுதிய இக்கட்டுரை, செப்டம்பர் 2023-ல்

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு சட்டத்தின் (நாரி சக்தி வந்தன் அதிநியம்) அமலாக்கத் தாமதம் குறித்து விவாதிக்கிறது.

- **தாமதத்திற்கான காரணம்:** மக்களவை மற்றும் மாநில சட்டமன்றங்களில் பெண்களுக்கு 33% இடஒதுக்கீடு வழங்கும் இச்சட்டம், "2026-க்குப் பிறகு எடுக்கப்படும் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு" மற்றும் தொகுதி மறுசீரமைப்புக்குப் (Delimitation) பிறகே அமலுக்கு வரும் என வரையறுக்கப்பட்டுள்ளது. அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பு 2027-ல் தொடங்கினால், மறுசீரமைப்புப் பணிகள் முடிய 2032 அல்லது 2033 ஆகலாம். எனவே, 2029 தேர்தலில் இது அமலாகாது, பெண்கள் 2034 வரை காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது.
- **முதன்மைத் தேர்வுக்கான முக்கிய முரண்பாடுகள் (Critical Flaws):**

1. **தொகுதி மறுசீரமைப்பு இணைப்பு:** பெண்களின் உரிமைகளை, சர்ச்சைக்குரிய 'வடக்கு-தெற்கு' மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்பு விவாதத்துடன் இணைப்பது தேவையற்ற அரசியல் தாமதத்தை ஏற்படுத்துகிறது.
2. **விதிவிலக்குகள்:** இச்சட்டத்தில் மாநிலங்களவை (Rajya Sabha) மற்றும் மாநில சட்ட மேலவைகளில் (Legislative Councils) இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை.
3. **ஓபிசி (OBC) பிரதிநிதித்துவம்:** எஸ்சி/எஸ்டி (SC/ST) பெண்களுக்கு உள்-ஒதுக்கீடு உள்ள நிலையில், சுமார் 40% மக்கள் தொகையைக் கொண்ட ஓபிசி பெண்களுக்கு உள்-ஒதுக்கீடு வழங்கப்படவில்லை.

- **தீர்வு:** அரசியலமைப்பின் 15(3) விதியைப் பயன்படுத்தி (பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள்), சட்டத்தைத் திருத்தி, தொகுதி மறுசீரமைப்பிற்கு முன்பாகவே இந்த இடஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

## 2. 'பாக்ஸ் சிலிக்கா' (Pax Silica) கூட்டணியில் இந்தியா

**TNPSC பாடத்திட்டம்:** அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சர்வதேச உறவுகள்




- **பின்னணி:** செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கும், முக்கிய கனிம விநியோகச் சங்கிலிகளைப் (Critical Minerals supply chain) பாதுகாப்பதற்கும் அமெரிக்கா தலைமையிலான 'பாக்ஸ் சிலிக்கா' கூட்டணியில் இந்தியா அதிகாரப்பூர்வமாக இணைந்துள்ளது.
- **இந்தியாவிற்கான முக்கியத்துவம்:** * இது இந்தியாவின் 'செமிகண்டக்டர் திட்டம்' (India Semiconductor Mission) மற்றும் 'தேசிய முக்கிய கனிமங்கள் திட்டங்களுக்கு' வலு சேர்க்கும்.
  - இந்தியாவின் அபரிமிதமான பொறியியல் திறன்களும், வளர்ந்து வரும் உற்பத்தித் திறனும், உலகளாவிய தொழில்நுட்ப விநியோகச் சங்கிலியில் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைக்க உதவும்.
- **சவால்கள் மற்றும் புவிசார் அரசியல் அபாயங்கள்:** * **பொருளாதாரப் பழிவாங்கல்:** வெளிப்படையாக சீனாவுக்கு எதிரான இந்த தொழில்நுட்பக் கூட்டணியில் இணைவது, சீனாவுடனான வர்த்தக உரசல் மற்றும் பொருளாதாரப் பழிவாங்கல்களுக்கு வழிவகுக்கலாம்.
  - **கொள்கை முரண்பாடு:** அமெரிக்காவின் கடுமையான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற விதிகள், இந்தியாவின் பாரம்பரிய வெளியுறவுக் கொள்கையான "பிரச்சனை அடிப்படையிலான அணிசேரா கொள்கைக்கு" (Strategic autonomy) முரணாக அமையலாம்.

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

### 3. ரத்து செய்யப்பட்ட அமெரிக்க வரிகள் (US Supreme Court vs. Trump)

**TNPSC பாடத்திட்டம்:** சர்வதேச பொருளாதாரம், நடப்பு நிகழ்வுகள்.

- **பின்னணி:** அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்த உலகளாவிய வரிகளை (Tariffs) அமெரிக்க உச்ச நீதிமன்றம் (6-3 என்ற பெரும்பான்மை தீர்ப்பில்) ரத்து செய்துள்ளது.
- **தீர்ப்பு:** சர்வதேச அவசரகாலப் பொருளாதார அதிகாரச் சட்டத்தைப் (IEEPA) பயன்படுத்தி அதிபர் தன்னிச்சையாக வரிகளை விதித்தது அரசியலமைப்புக்கு முரணானது என்றும், அமெரிக்க

நாடாளுமன்றத்தின் (Congress) ஒப்புதலின்றி "வரி விதிக்கும்" அதிகாரம் அதிபருக்கு இல்லை என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

- **இந்தியாவின் மீதான தாக்கம்:** இது இந்தியாவிற்கு மிகப்பெரிய இராஜதந்திர மற்றும் பொருளாதார விடுதலையாகும். ரஷ்யாவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து எண்ணெய் வாங்குவதற்கு பதிலடியாக, இந்திய ஏற்றுமதிகள் மீது ட்ரம்ப் நிர்வாகம் சமீபத்தில் 50% வரியை விதித்திருந்தது. இந்த வரிகள் தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளதால், இந்திய ஏற்றுமதியாளர்களின் சுமை குறைந்து, எதிர்கால சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை (FTAs) மேற்கொள்வதற்கான வலுவான அடித்தளம் கிடைத்துள்ளது.

## MCQs

**1. மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நேரடியாகச் சென்று ரேஷன் பொருட்களை வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டம் எது?**

A) அன்புக்கரங்கள் திட்டம்

B) தாயுமானவர் திட்டம்

C) தொல்குடி திட்டம்

D) கலைஞர் கைவினைத் திட்டம்

**2. இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டிற்கான (CPI) புதிய அடிப்படை ஆண்டு (Base year) சமீபத்தில் எத்தனையாம் ஆண்டாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது?**

A) 2011-12

B) 2018

C) 2022

D) 2024

**3. சிறந்த குழந்தைகள் மற்றும் குடும்பத் திரைப்படப் பிரிவில் இந்தியாவின் முதல் பாஃப்டா (BAFTA) விருதை வென்று வரலாறு படைத்த மணிப்பூரி திரைப்படம் எது?**

A) ஆர்கோ (Arco)

B) பூங் (Boong)

C) ஜூட்ரோபோலிஸ் (Zootropolis)

D) லிலோ (Lilo)

**4. அமெரிக்கா தலைமையிலான 'பாக்ஸ் சிலிக்கா' (Pax Silica) கூட்டணியில் இந்தியா சமீபத்தில் இணைந்தது. இந்த உலகளாவிய கூட்டணியின் முதன்மை நோக்கம் என்ன?**

A) இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பு

B) செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பு மற்றும் முக்கிய கனிமங்கள் (Critical minerals) விநியோகம்

C) உலகளாவிய சுகாதாரம் மற்றும் பெருந்தொற்று தடுப்பு

D) விண்வெளி ஆய்வு மற்றும் செயற்கைக்கோள் பகிர்வு

**5. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் விதித்த உலகளாவிய வரிகளை அமெரிக்க உச்ச நீதிமன்றம் சமீபத்தில் ரத்து செய்தது. எந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்த வரிகளை அவர் விதித்திருந்தார்?**

A) வர்த்தக விரிவாக்கச் சட்டம்

B) சர்வதேச அவசரகாலப் பொருளாதார அதிகாரச் சட்டம் (IEEPA)

C) தேசிய அவசரநிலைச் சட்டம்

D) வெளிநாட்டு வர்த்தக மற்றும் முதலீட்டுச் சட்டம்

**6. தமிழ்நாடு அரசின் 'கலைஞர் கைவினைத் திட்டத்தின்' முதன்மை நோக்கம் என்ன?**

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future

A) இலங்கைத் தமிழர்களுக்கு இலவச வீடுகள் வழங்குதல்

B) பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு நிதியுதவி வழங்குதல்

C) பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி மற்றும் மானியம் வழங்குதல்

D) தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து உணவு வழங்குதல்

## விடைகள்

1. **B) தாயுமானவர் திட்டம்**
2. **D) 2024**
3. **B) பூங் (Boong)**
4. **B) செயற்கை நுண்ணறிவு (AI) உள்கட்டமைப்பு மற்றும் முக்கிய கனிமங்கள் (Critical minerals) விநியோகம்**
5. **B) சர்வதேச அவசரகாலப் பொருளாதார அதிகாரச் சட்டம் (IEEPA)**
6. **C) பாரம்பரிய கைவினைக் கலைஞர்களுக்கு கடனுதவி மற்றும் மானியம் வழங்குதல்**

Thozhan Academy
Discover Yourself,
Define Your Future